Deposition of witness<br>(Chapter XXIII Code of Criminal Procedure)<br>In the Court of Assistant Session Judge, Vaniyambadi, Tirupattur District

Deposition of witness for

| | |
|---|---|
| Name | :Arulkumar |
| Father's Name | :Krishnan |
| Village | :New Washermenpet |
| Taluk | :Chennai |
| Caste | :BC |
| Calling | :Driver |
| Religion | :Hindu |
| Age | :46 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 24.11.2025

SC.No.224/2022 PW1 Name: அருள்குமார்

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் சென்னையில் குடியிருக்கிறேன். டிரைவர் வேலை செய்கிறேன். 14.05.2022ம் தேதி சென்னையிலிருந்து இரவு 8 மணியளவில் அசோக்லைலான் லாரியில் எலக்ட்ரானிக் லாரியில் எலக்ட்ரானிக் பொருட்களை ஏற்றிக்கொண்டு பெங்களூர் செல்வதற்காக கிளம்பினேன். லாரியின் பதிவு எண் டிஎன்03எபி 1279 ஆகும். மேற்படி லாரியை வாணியம்பாடி சுங்கசாவடியை அடுத்த நெக்குந்தி பாலிடெக்னிக் என்ற இடத்தில் அதிகாலை 1.30 மணிக்கு டீ சாப்பிடுவதற்காக நிறுத்தினேன். டீ சாப்பிட்டுவிட்டு லாரியில் மீண்டும் ஏறி உட்கார்ந்தபோது சுமார் 30 வயது மதிக்கதக்க ஒரு ஆண் கத்தியை காட்டி என்னை வண்டியைவிட்டு கிழே இறங்குமாறு மிரட்டினார். என்னை

தேவிடியாபையா என்ற கெட்ட வார்த்தையால் திட்டி, கொன்றுவிடுவதாக கூறினார். என்னை வண்டியிலிருந்து கீழே பிடித்து தள்ளினார். பின்னர் அந்த லாரியை அவர் பொருட்களுடன் கடத்திகொண்டு சென்றுவிட்டார் அது தொடர்பாக உரிமையாளருக்கு போன் செய்துவிட்டு அம்பலூர் காவல்நிலையத்தில் சம்பவம் குறித்து புகார் கொடுத்தேன். என்னை காட்டி மிரட்டிய கத்தை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும் நீதிமன்றத்தில் உள்ள கத்தி தான் அதுவாகும். அது சாபொ.1. சம்பவம் தொடர்பாக காவல்நிலையத்தில் கொடுத்த புகார் நீதிமன்றத்தில் உள்ளது தான் அது ம.சா.1. காவல் துறையினர் லாரியையும் பொருட்களையும் கண்டுபிடித்துவிட்டார்கள் என தகவல்கேட்டு அங்கு சென்று அடையாளம் காட்டினேன். அவற்றை நீதிமன்றத்தில் மனு செய்து நான் ஏற்கனவே பெற்றுக்கொண்டு சென்றுள்ளேன். லாரி சா.பொ2. அதிலிருந்த 84 அட்டை பெட்டிகள் சா.பொ 3. சம்பவத்தின்போது என்னை மிரட்டிய நபரை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். இன்று நீதிமன்றத்தில் என் முன்னிலையில் ஆஜராகியுள்ள எதிரி தான் சம்பவத்தின் போது என்னை கத்தியை காட்டி மிரட்டி, எனது லாரியையும், பொருட்களையும் கொள்ளையடித்து சென்ற நபர் ஆவார். போலிசார் விசாரித்தார்கள். நடந்த சம்பவம் குறித்து கூறினேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

சம்பவ தினம் இரவு 8 லிருந்து 8 1/2க்குள் கிளம்பினேன். பொதுவாக 3 முதல் 4 மணி நேரத்தில் வாணியம்பாடிக்கு சென்னையிலிருந்து வரமுடியும். அன்றைய தினம் சனிக்கிழமை என்பதால் சென்னை ஏர்போர்டிலிருந்து மிகவும் போக்குவரத்து நெரிசல் இருந்ததால் வாணியம்பாடி வருவதற்கு சுமார் 5 1/2 மணிநேரம் ஆகியது. வாணியம்பாடி சுங்கசாவடியை தாண்டிதான் சென்றேன். பாஸ்ட்ராக் மூலமாக

சுங்கசாவடியில் பணம் கட்டினேன். லாரியில் சுமார் 1 1/2 டன் முதல் 2 டன் மதிப்புடைய பொருள் இருந்தது. அதற்கான ரசீது இருந்தது. அது வண்டியுடன் எதிரி எடுத்து சென்றுவிட்டார் அதனால் காவல்நிலையத்தில் அதை காட்டவில்லை. தேசியநெடுஞ்சாலை என்பதால் நான் டீ குடிக்க சென்ற கடை 24 மணிநேரமும் இயங்கி வந்தது. டீ சாப்பிட்டுவிட்டு வண்டியில் வந்து ஏறும்போது தான் சம்பவம் நடந்தது. என்னை மீறட்டியது ஒரே ஆள்தான். ஆளை பாரத்தால் அடையாளம் காட்டமுடியும். லாரி இருந்த பொருட்களின் மதிப்பு எனக்கு தெரியாது. உரிமையாளருக்கு தான் தெரியும். புகாரில் கூறியுள்ள பொருட்களின் மதிப்பு வழக்கிற்காக ஜோடிக்கபட்டது என்றால் சரியல்ல. புகாரை என்னுடைய உரிமையாளர் எழுதினார் அதை நான் படித்து பார்த்து கையெழுத்து போட்டு காவல்நிலையத்தில் கொடுத்தேன். புகாரை 15.05.2022ல் மதியம் சுமார் 1 மணியில் காவல்நிலையத்தில் கொடுத்தேன். புகாரை போலிசார் எழுதவில்லை. காவல் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்து புகார் கொடுக்க சொன்னார்கள் நான் உரிமையாளருக்கு தகவல் சொல்லி அவர் வந்தபின் புகார் கொடுத்தேன். என்னுடைய உரிமையாளர் காவல் துறையின் உயர்ந்த அதிகாரியின் உறவினர் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. புகாரில் கூறபட்டுள்ள பொருட்களுக்கு காப்பீடு செய்யபட்டியிருக்கும். நானும் உரிமையாளரும் சேர்ந்து புகாரில் கூறபட்டுள்ள பொருட்களை களவாடுவதற்காக எதிரிக்கு எதிராக பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் நான் கூறியுள்ளபடி சம்பவம் நடந்திருந்தால் காவல் துறையினர் உடனடியாக வழக்கு பதிவு செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய லாரியின் வலதுபுற இருக்கையில்தான் எதிரி ஏறினார். என்னை எதிரி கெட்ட வார்த்தையால் பேசியது பொதுமக்களுக்கு கேட்கவில்லை. ரோட்டின்

இடதுபுறம் தான் லாரியை நிறுத்திருந்தேன். டீ குடிக்கும் இடத்தில் சுமார் 10, 20 நபர்கள் இருந்திருப்பார்கள். எதிரி என்னை கத்தியை காட்டி மிரட்டியபோது அவர்கள் யாரும் எனக்கு அருகில் வரவில்லை. வழக்கில் சாட்சி சொல்லவும் அவர்கள் முன்வரவில்லை. சாட்சி பட்டியில் உள்ள நபர்கள் பற்றிய முழு விவரம் எனக்கு தெரியாது. அவர்கள் என்னுடைய உறவினர் என்று சொன்னால் சரியல்ல. அருணாசலம் என்பவர் என்னுடைய உரிமையாளர். சம்பவத்தின்போது நான் ஓட்டி சென்ற லாரியின் மதிப்பு சுமார் 9 லட்சம் இருக்கும். அது 2021 மாடல் லாரி ஆகும். நீதிமன்றத்தில் உள்ள சா.பொ.1. கத்தியை வைத்துதான் சம்பவத்தின்போது எதிரி என்னை மிரட்டினார். பயத்தில் நான் எதிரியை தடுக்கவில்லை. எதிரி என்னை லாரியிலிருந்து கீழே இழுத்து தள்ளிபோட்டுவிட்டு லாரியையும் பொருட்களையும் எடுத்து சென்றுவிட்டார்.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 24/11/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்–கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2025.11.24 15:48:53 +0530

அமர்வு சார்பு நீதிபதி
வாணியம்பாடி.